மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) 140

(இ) எல்லாவித வியாதிகளுக்கும்.

(1) முக்கியமாக குன்மம், நீரழிவு, தோலைப்பற்றிய சொறி, சிரங்கு, கரப்பான் போன்ற வியாதிகள், காசம், சுவாசகாசம், சூதகவாயு, வெட்டை, வெள்ளை போன்றவைகள், இங்கு பிணி நீக்கம் செய்யப்படுகின்றன.

(2) கண், காது, மூக்கு, தொண்டை ஆகியவைகளில் ஏற்படும நோய்களுக்கும் சித்த மருத்துவ முறையில் பிணி நீக்கம் செய்யப்படுகிறது.

Mosquito Nuisance

* 205. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) the number of rivulets, streams, ponds and theppams in the City of Madras besides Adayar, Cooum and Buckingham Canals;

(*b*) whether the Government are aware of the fact that mosquitoes breed in these places as a result of stagnation of water;

(*c*) if so, whether there is any scheme to prevent this stagnation; and

(*d*) the details thereof?

கொசுத் தொல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை நகருக்குள் அடையாறு, கூவம் நதி, பக்கிங்காம் கால்வாய் தவிர இன்னும் எத்தனை சிற்றாறுகள், ஓடைகள், சிறு குளங் கள், தெப்பங்கள் இருக்கின்றன ?

(இ) இந்த இடங்களில் நீர் தங்குவதால் கொசு உற்பத்தியாகின்றது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(உ) ஆம் எனில், இதைத் தவிர்க்க ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(எ) அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) சென்னை நகருக்குள் அடையாறு, கூவமாறு, பக்கிங்காம் கால்வாய் தவிர சிற்றாறுகள் ஏது மில்லை. கழிவு நீர், ஓடைகள் இரண்டு உள. சிறு குளங்கள் நாற்பது உள. குட்டைகள் சற்றேறக்குறைய எண்ணூறுக்கு மேற்பட்டிருக்கும்.

(இ) ஆம்.

(உ), (எ) : பின்வரும் தடுப்பு முறைகள் மேற்கொள்ளப் படுகின்றன—

கழிவு நீர் ஓடைகள் : கரை ஓரங்களில் படர்ந்திருக்கும் செடிகொடிகள் புற்பூண்டுகள், குப்பை கூளங்கள், பாசைகள் முதலானவற்றை அகற்றி வாரம் ஒருமுறை மருந்தடிக்கப் படுகின்றன.

25th March 1969]

சிறு குளங்கள் : இ·.து இரண்டு வகைப்படும். ஒன்று, கோயில் குளம், இன்னொன்று தனிப்பட்டவர்க்குரிய குளம். இவ்விருவகைப்பட்ட குளங்களையும் சுத்தம் செய்ய அந்தந்த குளங்களுக்குறிய உரிமையாளர் களிடமிருந்து ஆண்டுக்கு ஒருமுறை பணம் பெற்றுக்கொண்டு இரு கிழமைக்கு ஒருமுறை சுத்தம் செய்யப்படுகின்றன.

முறை : குளத்தில் கண் படர்ந்திருக்கும் குப்பை கூளங்கள், செடி கொடிகள், புற்பூண்டுகள் முதலியவற்றை அகற்றி "கமபூசியா" என்னும ஒருவகை பூச்சிகொல்லி மீன் குளத்தில் இட்டு சுத்தம செய்யப் படுகின்றன.

குட்டைகள் : இவ்விடங்களில் தேங்கி இருக்கும் நீர்மீது வாரம் ஒருமுறை கொசு ஒழிக்கும் மருந்தடித்து கொசுக்கள் ஒழிக்கப் படுகின்றன.

Marriageable age.

* 206 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether the Central Government has consulted the State Government regarding raising of marriageable age; and

(b) if so, the reply of the Tamil Nadu Government?

திருமண வயது.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்.

(அ) திருமண வயதை உயர்த்துவதைக் குறித்து மத்திய அரசு தமிழக அரசின் கருத்தைக் கேட்டதா ?

(இ) ஆமெனில். தமிழ்நாடு அரசு அளித்த பதில் என்ன ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா: (அ) ஆம்.

(இ) இந்த விஷயம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

Government Training School for Women, Madurai.

* 207 Q. THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTHOSHAM) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Government Training School for Women has been shifted from Madurai Town to Tirunagar;

(b) whether hostel facilities have been made for the accommodation of all trainees desirous of such accommodation; and

(c) whether special transport facilities have been arranged for the trainees who wish to reside in Madurai and attend the school as day scholars?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ), (இ) ஆம்.

(உ) போக்குவரத்து அதிகாரிகளுடன் இது குறித்து கடிதப் போக்கு வரத்து நடைபெற்று வருகிறது.